# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office பின்புறம்),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590

**ஆணை நாள் 13.05.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். NC 1403/விசாரணை/E/2023 (SA 1564/F/2022)**

திருமதி இ.தாமரைச்செல்வி .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

.. பொது அதிகார அமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு)
அலுவலகம், மதுரை - 600 020

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 26.11.2025 நாளிட்ட ஆணையை தொடர்ந்து, மதுரை, இணை இயக்குநரின் (கள்ளர் சீரமைப்பு) நேர்முக உதவியாளர் ஆணையத்திற்கு 12.05.2026 நாளிட்ட அறிக்கையை அனுப்பி வைத்துள்ளார்.

2) அவ்வறிக்கையில், ஆணையத்தின் மேற்படி ஆணையின் முதல் உத்தரவின்படி, இவ்வாணையத்தின் 23.08.2023 நாளிட்ட உத்தரவை நிறைவேற்றாத முன்னாள் பொதுத் தகவல் அலுவலர் திரு சி.ப.ஜீவா என்பவரிடம் விளக்கம் கோரப்பட்டு, அவர் அளித்த விளக்கம் இணைக்கப்பட்டுள்ளது. அந்த விளக்கத்தில், மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலகத்தில் 14 பிரிவுகளுக்கும் சேர்த்து ஒரே ஒரு கண்காணிப்பாளர் பதவி மட்டுமே இருந்ததாகவும், மேலும் அப்போது காலியாக இருந்த நேர்முக உதவியாளர் இருக்கையையும் கூடுதல் பெறுப்பாக தான் கவனித்து வந்ததாகவும், அதனால் ஏற்பட்ட பணிச்சுமை காரணமாக தன்னால் தொடர் நடவடிக்கை எடுத்து, மனுதாரருக்கு உரிய காலத்தில் தகவல் வழங்க இயலாமல் போய்விட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

3) மேலும், மேற்படி ஆணையின் இரண்டாவது உத்தரவில் கூறப்பட்டுள்ளபடி மனுதாரருக்கு 27.01.2026 அன்று ரூபாய் 64/-ஐ (ரூபாய் அறுபத்து நாலு மட்டும்) அஞ்சல் அலுவலக மணியார்டர் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு, அதற்கான தபால் துறை ரசீதும் இணைக்கப்பட்டுள்ளது.

4) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள் பதில் வழங்காத பொதுத் தகவல் அலுவலரின் விளக்கத்தை ஏற்கிறது. எனினும், வருங்காலத்தில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களுக்கு உரிய காலத்தில் பதில் வழங்க வேண்டுமென அந்த அலுவலரை இவ்வாணையம் எச்சரிக்கிறது. இவ்வாணையத்தின் 20.11.2025 நாளிட்ட ஆணையில் உள்ள இரண்டு உத்தரவுகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த ஆணை நிறைவேற்றப்படாமை மனுவை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். NC 1403/விசாரணை/E/2023 (SA 1564/F/2022**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
கண்காணிப்பாளர்,
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு)) அலுவலகம்,
மதுரை - 600 020

இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு)
மதுரை - 600 020

திருமதி இ.தாமரைச்செல்வி
எண்.18, மகாத்மா காந்தி தெரு,
பாலாஜி நகர் திருப்பரங்குன்றம்,
மதுரை - 625 005

Copy to: File
CR/PA